ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

यतो मुमुक्षोर्बहुदुःखभाजनं य एष देहो मदीर भवानुगः ।
तमेव यो द्वेष्टि स एव मेसुहृत्तदात्मन स्स्यामहमात्मनः सुहृत् ॥

மோக்ஷத்தை விரும்பிய எனக்கு ஸம்ஸாரத்தை அனுஸரித்து நடந்துகொண்டு அதனால் பலவித துக்கங்களுக்கு என்னைப் பாத்திரனாக்கிய என்னுடைய சரீரமே எனக்கு சத்துருவாக இருக்கிறது. அந்த சரீரத்தையே எவன் த்வேஷிக்கிறானோ அவன்தான் எனக்கு மித்திரன். இப்படி நினைத்தால்தான் தத்ஸ்வரூபமான எனது அந்தராத்மாவுக்கும் நான் மித்திரனாவேன், என்று பெரியோர் நினைப்பார். உலகத்தில் பிராணிகள் அந்தந்த ஆத்மாவிற்கமைந்த சரீரத்தைப் பலவித காரணங்களால் த்வேஷிப்பார்கள். அந்தஸமயத்தில் இந்த ஊன உடலையே நானென்று நினைத்துக்கொண்ட மூடர்கள் இப்படி இவன் த்வேஷிக்கும்படியாயிற்று என்று அவனைச் சத்துருவாக நினைத்துப் பாபத்தையெல்லாம் செய்யத் துணிந்துவிடுவார்கள், உண்மையை ஆராய்ந்துபார்த்தால் அது உசிதமாகாது. இந்த சரீரம் நமக்கு ஹிதத்தைச் செய்யுமாயின் அதை த்வேஷிப்பவனிடம் ஆத்திரப்படலாம். நமக்குப் பிரியனாயுள்ளவனை த்வேஷிப்பவனிடம் கோபத்தையடைவது நியாயம்தானே. இந்த சரீரமோ நமக்கு ஹிதத்தைச் செய்யவில்லை. அம்மட்டோடில்லாமல் ஸம்ஸாரத்தில் வீடுபட்டு அதைப் பின்பற்றியேநடந்துகொண்டு நமக்குப் பலவித துக்கங்களையும் விளைவிக்கின்றது. ஆகவே இந்த சரீரம் நமக்குச் சத்துருவேயொழிய ஹிதகாரியல்ல. அப்படி நமக்குச் சத்துருவாயுள்ள தேகத்தைப் பற்றி தூஷிப்பவனை நம்சத்துருவைத் தூஷிப்பவனை மித்திரனாய் நினைப்பதுபோல் மித்திரனாக நினைப்பதல்லவா நியாயம், நமது சத்ருவினிடம் விரோதப்பட்டவனை மித்த்திரனாக நினைப்பதுதானே உலக வழக்கம். அப்படி ப்ராகிருத புத்திகள் நினைப்பதில்லை. மோக்ஷத்தை விரும்பி ஸம்ஸாரத்தை விட்டகன்ற வைராக்யமுள்ள விவேகிகளோவெனில் ஸம்ஸாரத்திற்கொத்தபடி நடக்கும் இச் சரீரத்தைச் சத்ருவென்றே நினைப்பார்கள். அதை எவனாவதொருவன் தூஷிப்பானாகில் அவனை ப்ரியமித்திரனாகவே நினைப்பார்கள். தானே த்வேஷிக்கவேண்டியதை த்வேஷிப்பவன் தமது கார்யத்தையே செய்கிறானென்று கருத்தாம். இதுபோலவே எல்லோரும் ஸம்ஸாரத்திலீடுபட்ட சரீரத்தை அபிமானித்து பாபத்தைத்தேடாமல் நல்வழியேநாடி நன்மையை அடைவார்களாக.

சுபம்,

பத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.
ஆங்கிரஸஹூ சித்திரைமீ ௨௰௨

முன் நினைத்தபடியே செய்யவேண்டும்.

புத்திமான் உண்மையையறிந்த நிலைமையில்முன்நினைத்தபடியே பிந்தியும் நடத்தவேண்டும். பெரும்பாலும் பிராணிகள் தாம் முன் நினைத்தபடியே ஸாதாரண கார்யங்களிலும் விசேஷ கார்யங்களிலும் நடத்திவருகிறார்கள். உதாஹரணமாக ஓர் சிறு பயனைக்கருதி ஸ்வாமிக்கு ப்ரார்த்தனைசெலுத்துவதாக வேண்டிக் கொள்ளுவார்களானால் சிறிதுகாலம் சிரமித்தாவது அந்த ப்ரார்த்தனையை நிறைவேற்றுகிறார்கள். அதில் எவ்விதத் தவறுதலும் வாக்கூடாதென்று முன் கூட்டியே ஜாக்கிரதையாக இருக்கிறார்கள். அப்படிப்போலல்லவா இந்த ஜீவாத்மாவும் தான் முந்தி கர்ப்பவாஸம் செய்துகொண்டிருக்கும்பொழுது எப்படி நினைத்தானோ அப்படியல்லவா நடத்தவேண்டியது உசிதம். கர்ப்ப வாஸத்தின்போது ஜீவன் நினைத்ததை சுருதிவிஸ்தாரமாகக் கூறியிருக்கிறது. அதன் சுருக்கமிதுவாம், இந்த கர்ப்பத்தைவிட்டு நான் வெளிப்படுவேனேயாகில் முற்பிறவிகளில்போல் கொண்டியாய்த் திரியமாட்டேன். பெரியோருக்கு அடங்கி நடப்பேன். பெரியோர் சொல்படியே நடப்பேன். தேகாதிகளில் அபிமானம் வைக்கமாட்டேன். நிவர்த்திமார்க்கத்தையடைந்து ஸாங்கிய யோகங்களை ஆச்ரயித்து இந்திரியங்களை அடக்கி மனதைக் கட்டுப்படுத்தி தியான நிஷ்டைக்குரியதாகச் செய்துகொண்டு பரமேச்வரனையே தியானம் செய்வேன். ஸம்ஸாரிகளைப்போல் காமாதிகளுக்கு வசப்படமாட்டேன், என்பதாதியாகக் கர்ப்பத்திலிருக்கும்போது ஜீவன் நினைத்தானும். பிறகு கர்ப்பத்தினின்று வெளிப்பட்டவுடன் முன் நினைத்தபடியே நடத்துபவனைப் பார்ப்பது அரிதிலும் அரிதாக இருக்கிறது. கர்ப்ப வாஸத்தில் யாரோ ஒரு ஜீவன்தான் அந்தப்படி நினைத்திருப்பான் என்று சொல்லுவதற்கில்லை; எல்லா ஜீவன்களும் அப்படி நினைத்

தாரகத்தான் சுருதிகூறுகின்றது. அப்படி எல்லோரும் நினைத்து விட்டுப் பிறகு ஒருவரும் அம்மாதிரி நடத்தாமலிருப்பது மிகவும் வருந்தத்தக்கதே. அப்படி முன் நினைத்தது நினைவுக்கு வரா விட்டாலும் அதையொருவன் போதிப்பானேயாகில் அவனிடம் நன்றி பாராட்டவேண்டியது. அப்படி அஸாதுக்கள் நன்றி பாராட்டுவதில்லை. விரோதத்தையும் பாராட்டுகிறார்கள். தற்போது வைதிகர்களிடம் பலர் த்வேஷப்படுகிறார்களே அதன் காரணமென்னவென்று ஆலோசித்தால் ஜீவன் கர்ப்பவாஸத்தில் நினைத்ததை நினைவூட்டியதைத் தவிர வேறு எவ்விதப் பிசகும் இல்லை. அதற்காக அஸாத்விகர்கள் த்வேஷப்பட்டாலும் ஸாத்விகர்கள் திருப்பி த்வேஷப்படுவதில்லை. தற்காலத்தியவர்களானாலும், எவரானாலும் அஸங்கனான ஆத்மவஸ்துவினிடத்தில் ஒன்றையும் செய்துவிட முடியாது. நிந்திப்பதானாலும், த்ரோகிப்பதானாலும் அவைகளைச் சரீரத்திடமே செய்யலாமேயன்றி வேறில்லை. சரீரமோ ஸம்ஸாரபந்தத்தைத் தழுவிநிற்பதால் நாம் த்வேஷிக்கவேண்டியதாயிருக்கிறது. அத்தகைய சரீரத்தைத் தற்காலத்தியவாகள் நிந்திப்பது நமக்குப் பேருதவிபுரிந்தாகவே ஆகுமென்றுதான் நினைப்பார்கள். அது அவர்களுடைய ஸாத்விகத் தன்மைக்கு அலங்காரமேயொழிய தாழ்மையல்ல. ஆனால் இவர்கள் சிரேயஸ்ஸையடையாமற்போகிறார்களேயென்ற கவலையைத் தவிர வேறில்லை- இப்படிச் சாந்த நிலைமையிலிருக்கும் வைதிகர்களிடம் த்வேஷத்தைப் பாராட்டாமல் அவர்கள் சொல்லுவதை ஹிதமென்றே நினைத்து எல்லோரும் சாச்வதமான சிரேயஸ்ஸையடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

ஸங்கிரமணவிஷயத்தில்தீக்ஷிதர்அபிப்பிராயம்என்ன?

(320-ம் பக்கத்தொடர்ச்சி)

இந்தவிடத்தில் ஸுதீவிலோசனக்காரர் கூறுகிறார்—

नैकः श्राद्धद्वयमेकोद्देश्यकमेकवासरे कुर्याद्देवतैक्यात् ।

ஒருதினத்தில் ஓர் கர்த்தா ஒரே தேவதைகளைக்குறித்து இரண்டு சிராத்தம் செய்யக்கூடாது என்றுசொல்லி மேலே நிஷேதத்தைக் காண்பிவிக்கிறார்.

तद्यथा नित्येन दार्शिकस्य सोदकुम्भेन मासिकस्य, दार्शिकेन मन्वादिग्रहणसंक्रान्तिश्राद्धानां सन्निपाते प्रसङ्गात्पूर्वसिद्धेः उत्तरं दार्शिकादि श्राद्धमेव कुर्यात् अनियतस्य बलीयस्त्वात् ॥

நித்யமான பித்ருயக்ஞத்துடன் தர்சமும், ஸோதகும்பத்துடன் மாஸிகமும், தர்சத்துடன் மன்வாதி, யுகாதி, கிரஹணம், ஸங்கிரமணம் இவைகள் கூடினால் பிந்தியதுகளான தர்சம் முதலியவை அனுஷ்டிப்பதனால் முந்தியவைகளும் செய்தபலன் சித்தித்துவிடுகிறதினாலும, அநியதங்கள் பலீயஸ் ஆகையினாலும் பின்னாடியுள்ள தர்சம் முதலியவைகளையே செய்யவேண்டுமென்று கூறியிருப்பதால் தர்ச ஸங்கிரமண ஸந்நிபாதத்தில் ஸங்கிரமணத்தையே செய்யச்சொல்லி மேலே கூறுகிறார்.

तथा देवतैक्येऽपि निमित्तभेदे नैमित्तिकानि कुर्यात् ॥

தேவதைகள் ஒன்றாயிருந்தாலும் நிமித்தபேதமிருந்தால் நைமித்திகங்களைச் செய்யவேண்டும் எனும் மூலத்திற்கு வியாக்கியானமான பித்ருமேதஸாரத்தில் “எப்படி தேவதைகள் பேதமிருந்தால் இரண்டு சிராத்தம் விதியோ அப்படியே நிமித்தபேதமிருந்தாலும் செய்யவேண்டியதுதான். இந்தவிடத்தில் ஒரே தேவதைகளாயிருத்தல் செய்யாமலிருப்பதற்குக் காரணமில்லை. இரண்டல்லது அநேகநிமித்தங்கள் ஒருநாளில் சேர்ந்தால் நிமித்தங்களை முறையே செய்யவேண்டும் என்று காத்யாயன மகர்ஷி நிமித்தங்கள் ஸமான்மான பலமுள்ளவைகள் ஆதலால் கூறியுள்ளார். எப்படி தர்ச உபராக ஸங்கிரமணங்களின் சேர்க்கையில் செய்ய வேண்டுமோவென்று தர்ச சங்கிரமணங்களில் தர்சத்தையும், அனுஷ்டிக்கும்படி சொல்லப்பட்டிருக்கிறது.

यथा देवताभेदे श्राद्धद्वयकरणं तथा निमित्तभेदे च श्राद्धद्वयविधानम् । नात्र देवतैक्यं प्रयोजकमित्यर्थः । अत्र कात्यायनः । द्वे बहूनि निमित्तानि जायेरन्नेकवासरे । नैमित्तिकानि कार्याणि निमित्तोत्पत्त्यनुक्रमात् । निमित्तानां तुल्यत्वादित्यर्थः । यथादर्शोपराग संक्रान्ति संमेळन इति ॥

ஒரே கிரந்தத்தில் இவைகள் முன்னுக்குப் பின் விரோதம்போல் தோன்றினாலும், இரண்டு நிமித்தங்கள் ஒருதினத்தில் ஒரேகாலத்தில் வந்தால் ஒன்றைவிட்டு ஒன்று செய்கிறதென்றும் வெவ்வேறு

காலமாயிருந்தால் காலபேதத்தால் இரண்டையும் செய்யலாம் என்றும், சொல்லவந்த அபிப்பிராயமானதால் விரோதமில்லை.

மேலும் மேலே கூறப்பட்ட तद्यथानित्येन ++++ प्रसङ्गात् पूर्वसिद्धेः'' என்கிற வாக்கியத்தில் संक्रान्तिशब्दं அதிகமாக சேர்த்திருக்கலாமென்று ஏற்படுகிறது. ஏனெனில் சிராத்தகாண்டத்தில் வைத்தியநாத தீக்ஷிதரவர்களால் பித்ருமேத ஸாரத்தில் என்று இதே வாக்யத்தை உதாஹரிக்கும்பொழுது—

दार्शिकेन मन्वादियुगादिग्रहणश्राद्धानाम् ।

என்று ஸங்கிராந்தி சப்தமில்லாமலே சொல்லியிருக்கிறார். பித்ருமேத ஸாரகாரர் நைமித்திகங்களான தர்ச சங்கிரமணங்களுடைய சேர்க்கையில் நிமித்தங்கள்முறையே உண்டானபடி காலபேதத்தால் அனுஷ்டிக்கும்படிக்கும், ஒரேகாலமாயிருந்தால் அநியத நிமித்தமானதென்றும், தீர்மானித்திருக்கிறார். இதன் நிர்ணயத்தை ஆர்யதர்மம் மூலமாகப் பெரியோர்கள் தெரிவிக்கவேணுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

வி. உமாமகேச்வரசாஸ்திரிகள்.

சில ஆசங்கைகள்.

உபாகர்ம விஷயமாக சில ஆசங்கைகள் உண்டாயிருக்கின்றன. அவைகளை இங்கு வெளியிடுகிறோம். லௌகிக கார்யமானாலும் உசிதகாலத்தில் செய்யப்பட்டாற்றான் பயனை அளிக்கும். காலந்தவறி செய்யப்பட்டால் பயனில்லாமல் போவதோடு மாத்திரமில்லை. விபரீதமான கெடுதல்களையும் உண்டாக்கிவிடும். இந்த நியாயப்படி உபாகர்மா என்ற கார்யமும் அதற்கென்று விதிக்கப்பட்ட உசிதகாலத்தில். செய்தாற்றான் அதன் பயன் கிடைக்கும். தோஷமுள்ளகாலத்தில் செய்தால் விபரீதமாகும். கர்த்தாவுக்குமாத்திரம் கெடுதலென்பதுமாத்திரமில்லை. அந்த ராஜ்யத்திற்கே கெடுதலுண்டாகுமாம். அங்ஙனமே நிர்ணயஸிந்துவில்:—

अथ चेद्दोषसंयुक्ते पर्वणि स्यादुपाक्रिया ।
दुःखशोकामयग्रस्ता राष्ट्रे तस्मिन् द्विजातयः ॥

"தோஷமுள்ள பர்வாவில் அந்த உபாகர்மாவைச்செய்தால் அந்த ராஜ்யத்திலுள்ள எல்லா துவிஜாதிகளுமே துக்கம், சோகம், வியாதி இவைகளால் பீடிக்கப்படுவார்கள்" என்று கூறப்பட்டிருக்கிறது. அதனால் தோஷமுள்ளகாலத்தில் செய்யக்கூடாது என்று ஸித்தமாகிறது. அப்படியிருக்கையில் ஆபஸ்தம் ஸூத்திரிகளுள் சிலர் என்னதோஷமிருந்தாலும் சிராவணீ பௌர்ணமியிலேயே உபாகர்மம் செய்யவேண்டுமெனப் பிடிவாதமாய்ச் சொல்லுகிறார்கள். வேறு சிலர் சிராவணீ பௌர்ணமிக்குத் தோஷமிருந்தால், பிரௌஷ்டபதியிலும், அதிலும் தோஷம் வந்தால் ஆஷாடியிலும் உபாகர்மத்தை ஆபஸ்தம்பிகள் செய்ய வேண்டுமென்று—

प्रौष्ठपद्यामुपाकुर्याच्छ्रावणं दूषितं यदि ।
आषाढे वापि कर्तव्यं प्रौष्ठपद्याश्च दूषणे ॥

சிராவணீ பௌர்ணமிக்குத் தோஷம்வந்தால் பிரௌஷ்டபதியில் உபாகர்மாவைச் செய்யவேண்டும். அதற்கும் தோஷம்வந்தால் ஆஷாடியில் செய்யவேண்டும் என்ற வசனத்தை அனுஸரித்துச் சொல்லுகிறார்கள். இதில் சிலர் பிரதமோபாகரணத்திற்குத் தோஷம்பார்க்கவேண்டுமென்றும், இரண்டாவது முதலிய உபாகர்மங்களுக்குத் தோஷம் பார்க்கவேண்டியதில்லையென்றும் கூறுகிறார்கள். பொதுவாக எல்லா சாகைகளுடைய உபாகர்மங்களுக்கெல்லாம் ஒரே காலந்தான் விதிக்கப்பட்டுள்ளதா? வேறு காலமும் விதிக்கப்படுகின்றதா? வேறுகாலம் விதிக்கப்படுமாயின் அது எப்பொழுது ஆச்ரயிக்கவேண்டியது? முக்கியகாலத்திற்கு தோஷம் வந்தபோதென்றால் அந்தத் தோஷங்கள் எவை? அவைகளெல்லாம் துல்ய பலமுள்ளவைகளா? அல்லது தாரதம்யம் உண்டா? பிரதமோபாகர்மா, த்விதீயாத்யுபாகர்மா, என்பதாதி விசேஷமுண்டா? பஞ்சாங்கபேதத்தால் வருகிறகாலபேதத்திற்கு எப்படி ஸித்தாந்தம்? இவ்வாசங்கைகளையும் இவைபோல் தோன்றக்கூடிய ஆசங்கைகளையும் அனுவதித்து ஸரியான ஸமாதானத்தை ஆர்யதர்மம் மூலமாகவே தர்மசாஸ்திர ப்ரவீணர்கள் வெளியிடுவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

கிருஷ்ணன்.

உ

ஸ்ரீசங்கரோவிஜயதே.

ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசார்ய கும்பாபிஷேக ஜயந்தி

மஹோத்ஸவாஹ்வான பத்திரிகை.

जयन्ति जगदाचार्या जयदद्वैतसूक्तिभिः ।
विमताशेषसिद्धान्त ध्वान्त बालांशुमालिभिः ॥
आङ्गीरसाख्यवर्षे दिननाथे मेषराशिमुपयाते ।
राधे मासे हरभे भूमिजवारेऽवदातपञ्चम्याम् ।
भविता महो महीयान्महिमैकनिधेस्सुरौघमहितस्य ।
श्रीमच्छङ्कर भगवत्पादगुरो भेंदवादभिदुरस्य ॥
पञ्चदश वार्षिकोयं मण्डकोळत्तूरभिधेऽग्रहारवरे ।
आगत्य वीक्ष्यचमहं कुरुतात्मानं कृतार्थजनवर्यम् ॥
श्रीमच्छङ्कर भगवत्पादजयन्तीमहोत्सवात्पूर्वम् ।
तेषामर्चामूर्तितस्थापनमपि कार्यतेऽत्रशिष्यजनैः ॥

प्रगे समर्चनं गुरोश्श्रुतिप्रपाठपूर्वकं प्रपूजनं द्विजन्मना मयाऽऽतिथेयकर्मणा। प्रतोळिका महोत्सवस्ततो निशीथसङ्गमे महेऽत्रदेशिकेशितुस्स्युरत्र वाङ्मुखान्यपि ॥

ஆஸ்திகர்காள்! ஸ்ரீகைலாஸவாஸியான பரமேச்வரன் ப்ரஹ்மாதிதேவர்களின் ப்ரார்த்தனானுஸாரியாய் ஸ்ரீ சங்கரர் என்னும் திவ்யநாமத்துடன் இப்புண்ய பூமியாகிய பரதகண்டத்தின்கண் அவதரித்து கலியின் ப்ரபாவத்தினால் அக்காலத்தில் எங்கும் பரவி நின்ற எழுபத்திரண்டு துன்மதங்களைக்கண்டித்து, நான்குவர்ணங்களைச்சார்ந்த ஸமஸ்த ஆஸ்திக சிஷ்யகோடிகளும் உஜ்ஜீவிக்கும்படி வைதிகமான சைவம், வைணவம் முதலிய ஆறு மதங்களையும் முக்யமாக அத்வைத மதத்தையும், ஆஸேது ஹிமாசலம் வரையுள்ள முக்ய க்ஷேத்திரங்களுக்குச்சென்று ஆங்காங்கு ஷடி மதத்தைப்பரவச்செய்த விஷயம் யாவரும் அறிந்ததே.

அப்பேர்பட்ட அவதார ச்ரேஷ்டராகிய ஆதி ஸ்ரீ சங்கராசார்யாளுடைய பதினைந்தாவது ஜயந்தீ மஹோத்ஸவமானது,

பாஹு நதிக்கரையிலமையப்பெற்ற மண்டகொளத்தூர் அக்ரஹாரத்தில், ஆங்கீரஸநாம ஸம்வத்ஸரம் சித்திரை மீ 28௳ செவ்வாய்க்கிழமை (10—5—32) வைசாகசுத்த பஞ்சமியன்று காலை ஸ்ரீமத்ாசார்ய பூஜை, வேதம், முதலான பாராயணம், அதிதிஸத்காரம் உசிதகாலங்களில் அரியவித்வான்களின் உபந்யாஸங்கள், இரவு ஸ்ரீமதாசார்ய பிம்பத்திற்கு வீதியில் உத்ஸவம் நாமபஜனம் இவை முதலான வைபவங்களுடன் நடைபெறும். அவ்வமயம் ஆஸ்திக சிஷ்யகோடிகளனைவரும் வந்திருந்து தங்களாலான உதவியைப் புரிந்து பூஜை முதலிய வைபவங்களைதரிசித்து ஸ்ரீமதாசார்யாளுடைய பரிபூர்ண க்ருபைக்குப் பாத்திராளாகும்படி ப்ரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளப்படுகின்றது. ஸ்ரீஜயந்தியுத்ஸவ தினத்திற்கு முன்தினங்களில் ஸ்ரீமதாசார்ய பிம்பத்திற்கு கும்பாபிஷேகம் நடைபெறும்,

ஸ்ரீசங்கர நிலயம்,
மண்டகொளத்தூர்
24—2—32

இப்படிக்கு,
சிஷ்யகோடிகள்.

குறிப்பு:— இங்கிலயம் கும்பகோணம் மடம் ஸ்ரீமதாசார்ய பாதாளுடைய ஸ்ரீமுகத்வாராகவும், 5-3-30 ல் நேராக விஜயஞ் செய்தும் அனுக்ரஹத்தையும், ஆதரவையும் பெற்றது.

௳

ஸ்ரீ குருப்யோநம:

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலயத்தில் நடைபெறும் ஆங்கீரஸ வருஷத்திய ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவ வேதாந்த உபந்யாச பிரகடனப் பத்திரிகை.

ஸ்ரீ கைலாஸவாஸியான பரமேசுவரன் ப்ரம்மாதி தேவர்களின் பிரார்த்தனைக் கிணங்கி லோக க்ஷேமார்த்தமாய் தர்மஸ்தாபனம் செய்யவேண்டி சுமார் 2,500 வருஷங்களுக்கு முன் இப்புவியில் காலடிஎன்னும் க்ஷேத்திரத்தில் அவதரித்து ஸ்ரீ சங்கரர் என்னும் நாமதேயத்துடன் தேசமுழுவதும் திக்விஜயஞ் செய்து அனேக துர்மதங்களை கண்டித்து ஷண்மதஸ்தாபனஞ் செய்து அத்வைத மதத்தை நிலைநாட்டி உத்தமமான பல க்ஷேத்

திரங்களில் மந்திரஸ்தாபனங்களை செய்தார்கள் என்பதும், ஸ்ரீ சங்கரபகவத்பாத மூர்த்திகள் கடைசியில் மோக்ஷ நகரங்களில் ஒன்ருகிய ஸ்ரீ காஞ்சி க்ஷேத்திரத்தை அடைந்து அந்தக்ஷேத்திரத்தை ஸ்ரீ சக்ராகாரமாய் நிர்மாணஞ்செய்து பிந்துஸ்தானத்தில் ஸ்ரீ காமகோடி பீடத்தை ஸ்தாபனஞ்செய்து ஜகதம்பிகையான ஸ்ரீ காமாக்ஷிதேவியின் ஸந்நிதானத்தில் ஸ்ரீசக்கிரப்பிரதிஷ்டை செய்தும் ஸர்வக்ஞபீடாதிரோஹணம்செய்தும், இன்னும் காமாக்ஷி ஸந்நிதானத்தில் அர்ச்சாரூபமாய் விளங்கிக்கொண்டு பக்த கோடிகளுக்கு அனுக்ரஹம் புரிந்துவருவதும் யாவரும் அறிந்தவிஷயமே.

அப்பேர்பட்ட ஸ்ரீபரமாசாரியாளுடைய அவதார தினமாகிய நாளது ஆங்கீரஸ ஹூ சித்திரை மீ 28௳ (10-5-32) மங்கள வாரம் முதல் வைகாசி மீ 6௳ (19-5-32) குருவாரம் முடிய ஸ்ரீ காமாக்ஷியம்பாள் ஆலயத்தில் ஸ்ரீமத் ஆசார்ய பகவத் பாத மூர்த்தியின் ஸந்நிதானத்தில் ஸ்ரீ காஞ்சீகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் அவர்களின் ஆக்ஞையை முன்னிட்டு, பிரதிதினம் உபநிஷத் பாராயணம், ப்ரஸ்தானத்ரய பாஷ்ய பாராயணம், மஹந்நியாச ஜபம் முதலிய இதர பாராயணங்களும் காலை மாலைகளில் விசேஷ பூஜை, அர்ச்சனை அபிஷேகம், முதலியது நடத்தி, ஸ்ரீ பரமாசாரிய மூர்த்திக்கு முதல் தினமாகிய சித்திரைமீ 28௳ (10—5—32) காலையில் ஆலடி சேர்வையில் 4 வீதி உத்ஸவமும் பிரதிதினம் ஸாயங்காலத்தில் பிராகாரப் பிரதக்ஷிண உத்ஸவமும், உபந்யாசங்களும் * பூர்த்தி தினமாகிய வைகாசிமீ 6௳ குருவாரத்தன்று ஸ்ரீ விநாயகருக்கும் ஸ்ரீ அம்பாளுக்கும் ஸ்ரீ ஆசார்ய மூர்த்திக்கும் ஸகல ஸந்நாஹ வைபவங்களுடன் ராஜ வீதியில் வீதிப்பிரமண மஹோத்ஸவம். இவ்விதம் ஸ்ரீமத் ஆசார்யஜயந்தி மஹோத்ஸவம் நடைபெறுவதோடு தக்க பண்டிதர்களைக்கொண்டு காஞ்சியில் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள் ஸ்ரீ மடத்தில் வேதாந்த உபந்யாசங்களும் நடத்துவதாய் நிச்சயமாயிருக்கிறது.

ஆஸ்திக மஹா ஜனங்கள் அனைவரும் ஷை மஹோத்ஸவ காலத்தில் ஸ்ரீமத் ஆசார்ய மூர்த்தியைத் தரிசித்தும், பண்டித உத்தமர்கள் நடத்தும் உபந்நியாஸாதிகளைச் சிரவணம் செய்தும்,

* உபந்நியாசக கிரம விபரம் பின்பு தெரிவிக்கப்படும்,

ஸ்ரீ பரமாசார்ய பூர்ணாநுக்கிரஹ பாத்திரர்களாய் ஐஹிகாமுஷ்மிக சிரேயஸ்ஸுகளை அடையவேண்டுமாய் க்ஞாபிக்கப்படுகிறது.

ராவ்பஹதூர்
A. துரைஸாமி அய்யர்
ரிடைர்டு டிப்டி கலெக்டர் &
தேவஸ்தானம் ஸ்ரீ கார்யம்
ஸ்ரீ காமாக்ஷிஅம்பாள்
தேவஸ்தானம், காஞ்சீபுரம்.
25—4—32

K. குப்புஸாமி அய்யர்,
ஸ்ரீ காமாக்ஷியம்பாள் தேவஸ்தானம்ஆதீன
பரம்பரை தர்மகர்த்தரவர்களாகிய
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்
குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் அவர்கள்
ஸ்ரீமடம் ஸ்ரீகார்யம் ஏஜண்டு
கும்பகோணம்.

கல்வி.

கற்கப்படுவது கல்வியெனப்படும். ஒருவன் எவ்விதக்கல்வியேனும் கற்று அதில் சிறப்புற்று விளங்குவானேயாகில் அதுவே அவன் பெறவேண்டியவைகளுள் சிறந்ததாம். உலகத்தில் முக்கியமாக நாம் அடையவேண்டியவைகள் பல. அவை யாவன கல்வி—செல்வம்—மக்கள் முதலியனவாம். இவற்றுள் கல்வியே முதன்மையானது.

ஏனெனில்— "இம்மை பயக்குமால் ஈயக்குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுணாக்கேடின்றால்
எம்மை உலகத்தும் யாங்காணேம்
கல்விபோல் மம்மாருக்கும் மருந்து"

என்ற நாலடியாரின் மொழிப்படி மற்றையவை கல்விபோலாவதில்லை யாவாமென்க. அதெப்படியெனில் கூறுவாம். ஏராளமான செல்வம் நிரம்பக்கிடைத்தாலும் அச்செல்வம் தேடும் பொழுதும், காப்பாற்றும்பொழுதும், சிலவாகும்பொழுதும், அழியும்பொழுதும், துக்கத்தை விளைவிக்கின்றதே யன்றி சுக ஹேதுவாவதில்லை. அன்றியும் செல்வத்திற்கு நீரினாலும் நெருப்பினாலும், மற்றும் பலவித காரணங்களாலும் அழிவு நேரிடுவது அனுபவசித்தம். கல்வியோ எவற்றாலும் அழிக்க முடியாதது. செல்வம் பிறருக்குக் கொடுக்கும் தோறும் குறைந்துகொண்டே வரும், கல்வியோ பிறருக்குக் கொடுக்கும்தோறும் மேன்மேலும் வளர்ந்துகொண்டேவரும். இதையே

வெள்ளத்தாற்போகாது வெந்தணலால் வேகாது
வேந்தராலும் கொல்லத்தான் முடியாது கொடுத்தாலும்
நிறைவொழியக் குறைவுபடாது.
காவலுக்கோ மிகவெளிது கள்ளர்க்கோ மிகஅரிது
கல்வியென்னும் உள்ளத்தே பொருளிருக்க உலகெல்லாம்
பொருள்தேடி உழல்வானேன் என்றார் ஒருவர்.

வடமொழியில் மகா கவியான பர்த்திருஹரியாரும்

हर्तुर्याति न गोचरं किमपि शं पुष्णाति यत्सर्वदा
ह्यर्थिभ्यः प्रतिपाद्यमानमनिशं प्राप्नोति वृद्धिंपराम् ।
कल्पांतेष्वपि न प्रयातिनिधनं विद्याख्यमन्तर्धनं
येषां तान्प्रतिमानमुज्झत नृपाः कस्तैः सहस्पर्धते ॥

"திருடனுக்கு அகப்படாததும் எப்பொழுதும் சொல்லவொண்ணாச்சுகத்தையே தருவதும் பிரார்த்திப்பவர்கள் கேழ்க்கும்போதெல்லாம் கணக்கில்லாமல் கொடுக்கப்பட்டாலும் கொஞ்சமேனும் குறையாமல் அதிகமாக விருத்தியடைவதும் பிரளய காலத்திலும் அழியாததும் கல்வியென்னும் உள்ளிருக்கும் செல்வம் எவர்களுக்கிருக்கின்றதோ அவர்கள் விஷயத்தில் ஓ அரசர்களே தங்கள் அபிமானததை விட்டுவிடுங்கள். அவர்களோடு எவன் போட்டிபோடுவன்" என்றுரைத்தார்.

இதுபோலவே மற்றபல பண்டிதர்களும் கல்வியை பலவிதமாகச் சிறப்பித்துக் கூறியுள்ளார். இந்தக் கல்வி மனிதருக்குத்தான் உரியது. ஏனெனில் மனிதனே மிகப் புனிதமானவன். மானிடப்பிறவியைக் காட்டிலும் உயர்ந்த பிறவியில்லை என்று எம்மதத்தாரும், எந்நூலாரும் ஸம்மதித்திருக்கிறார்கள், அதற்குக் காரணம் எது என்பதை ஒருவன் ஆராயப்புகுந்தால கல்வியென்றே நன்குவிளங்கும். எப்படியெனில் மனிதனைச் சிறப்பித்துக்காட்டுவது அவனிடத்திலிருக்கும் அழகா? அங்கங்களின் அமைப்பா? வேறுகுணங்களா? என்றால் அவைகளில்லை என்பது வெளிப்படை, மனிதனுக்கு ஏற்படக்கூடிய அழகெல்லாம் சேர்க்கையினால் ஏற்பட்டதேயன்றி இயற்கையாயுள்ளதல்ல, கூட்டில் வாழும் பறவைகளும், காட்டில்திரியும் மிருகம் முதலியவைகளும் ஒருவரும் அழகுபடுத்தாமலே இபற்கையாகவே அழகுபெற்று

அவ்வழுகைப்பார்க்க அவாக்கொள்வது நம்மவர்களுக்கே அநுபவ சித்தம். ஆதலினால் அழகுமுதலியவற்றால் ஒரு மனிதன் மேன்மைப்பட்டவனல்லவென்பது தெற்றெனப் புலப்படுகின்றது. மற்றெதனால் எனின் ஆராயுமிடத்து மற்ற ஜீவஜந்துக்களிடத்தில் இல்லாத பகுத்தறிவு என்னும் ஓர் பேரறிவு இம் மானிட உடலுக்குமாத்திரம் பாத்தியப்பட்டிருக்கிறதுதான் என்பது நன்கு விளங்கும் இதுபற்றியன்றோ கல்வியிற் பெரியராம் கம்பரும்

"தக்கவின்ன தகாதனவின்னவென்
றொக்கவுள்ளலாரயினுயர்ந்துள
மக்களும் விலங்கே என்றும்,

விலங்கொடுமக்களனையரிலங்குநூல் கற்றாரோடேனையவர்,
என்று திருவள்ளுவநாயனாரும்

आहारनिद्राभयमैथुनानि सामान्यमेतत् पशुभिर्नराणाम् ।
ज्ञानं हि तेषां अधिको विशेषः ज्ञानेन हीनः पशुभिः समानः ॥

"ஆஹாரம், நித்திரை, பயம், புணர்ச்சி' இவைகள் பசுக்களுக்கும் மனிதர்களுக்கும் சமமானவைகளே. பகுத்தறிவொன்றுதான் மனிதர்களுக்குள்ள விசேஷம். அதில்லாதவன் பசுவிற்கொப்பானவனே" என்று பர்த்ரிஹரியும் சொல்லியிருக்கின்றார்.

அறிவின் இலட்சணமென்னவென்று சற்றுவாராய்வோம். அதுதான் அயர்ந்தோரை உயர்ந்தோராக்குவதும், சிறியோரைப் பெரியோராக்குவதும், நாரை சூராக்குவதும், அனைத்திற்றும் மேலானதும், அனைத்திற்கும் காரணமானதாயிருப்பதும் இவ்வறிவே. இவ்வறிவு வெளியிலிருந்து விலைக்கு வாங்கப்படுவதும், உலோகங்களைப்போல் கனிகளினின்றும் வெட்டியெடுக்கப்படுவதும் அன்று. ஆனால் அது ஒவ்வொரு மனிதனிடத்தும் இயற்கையாக அமைந்திருக்கிறது. அறிவில்லாதவர் எல்லாச் சிறப்பும் உடையவராயினும் ஒன்றுமில்லாதவரையொப்பர். அறிஞர் வறியவரேனும், சகலபாக்கியங்களையும் உடையவராவர். "மேற்பிறந்தாராயினுங் கல்லாதவர் கீழ்ப்பிறந்தும் கற்றானனைத்திலர்பாடு" "விலங்கொடு மக்களனையரிலங்குநூல் கற்றாரோடேனையவர், உளரென்றுமாத்திரையால்லாற்பயவாக் களரனையர் கல்லாதவர்" என்றபடி கல்லாதவர்கள் மேற்குலத்தில் பிறந்திருந்தபோதிலும்

கீழ்க்குலத்திற்பிறந்த கற்றாரோடு சமானமானவராகாரென்றும், கற்றவர்களுக்குச் சமானமாக மக்களையும், கல்லாதவரை மிருகங்களுக்கு ஒப்பிட்டிருப்பதுடன் கல்லாதவரை விளைவில்லாக் களர் நிலத்திற்குச் சமானமாகக் கூறியிருக்கிறார்.

கல்லாதவரடையும் இழிவைப்பற்றியும், கற்றவர் அடையும் மேன்மையைப்பற்றியும் பெரியோர்கள் ஆங்காங்கு அநேகம் எடுத்துக் கூறியுள்ளார். உதாரணமாக,

"கல்லாதான்சொற் காமுறுதல் முலையிரண்டு
இல்லாதாள் பெண்காமுற்றற்று"

"கல்லாவொருவன் றகைமைதலைப்பெய்து
சொல்லாடச் சோர்வுபடும்"

கல்லாதானொட்பங்கழிய நன்றாயினுங்
கொள்ளாரறிவுடையார். என்று

திருவள்ளுவ நாயனார் எடுத்துக் கூறியிருக்கிறார். கல்லாதவர் தான் எவ்வளவு அந்தஸ்தோடுயிருந்தபோதிலும் அவன் கற்றோர் முன் பேசினானாகில் அவர்கள் சொல்வதற்கு ப்ரத்யுத்தரம்தரும் பொழுதே வழுப்படுவதால் தன்னை மதித்த மதிப்பையெல்லாம் நாசமாக்கிக்கொள்ளுகிறான். தவிர எதாவது ஒருயிடத்து அவன் சொல்வதானது ஸரியாகவிருந்தபோதிலும் அதை ஒருவரும் கவனியாமல் அலக்ஷியம்செய்து அவமதிக்கிறார்கள். மேலும் கல்லாதவன் தன்னிடத்திலிருக்கும் அபிப்பிராயத்தை வெளியிட சக்தியற்றவனும், ஒரு ஸபையில் பேச அசக்தனும், ஸத் ஸங்கங்களோடு பழகத்தெரியாதவனும், வித்வான்களுடைய சேர்க்கையில்லாமலும், தள்ளப்பட்டுப் போய்விடுகிறான். அவன் உலகத்தில் நடக்கவேண்டிய காரியங்களை இவ்விதம் செய்வதெனத் தெரியாமல் இகத்திற்குக்கூட சாதகத்தைத் தேடிக்கொள்ள முடியாமல் தனக்கு இருக்கும் தனத்தையும், தர்ம விஷயங்களில் செலவழியாது தனக்கும் நன்மையை உண்டுபண்ணிக்கொள்ளாமல் பிறருக்கும் உண்டுபண்ணாமல் இன்னது செய்வதெனத் தெரியாமல் தத்தளித்து நிற்கின்றார். கல்லாதவன் அடையும் இழிவைப்பற்றிச் சொல்லவந்தவிடத்துப் பெரியோர்,

" நுண்மாணுழைபுலமில்லானெழிநல
மண்மாண்புனைபாவையற்று"

"நல்லார் கட்பட்ட வறுமையினின்னாதே
கல்லார்கட்பட்ட திரு"
அரங்கின்றி வட்டாடி யற்றேநிரம்பிய
நூலின்றிக் கோட்டிகொளல், என்றும்

அருளிச்செய்திருக்கிறார். இம்மட்டுமல்ல. அவன் எவ்வித காரியத்திலும் சரியே செய்யும் வழிதெரியாது கெடுத்துக்கொண்டு விடுகிறான். கல்லாதவன் தன்னுடைய கண்களைக்கொண்டு பிரயோஜனப்படுத்த வகையறியாமலே போய்விடுகிறான். புறத்திற்றோன்றும் இக் கண்களைக்கொண்டு அகத்திற்றிகழும் அறிவாகிய ஞானக்கண்ணை அறியவேண்டும். உயிருக்குப் பரம சாதனமாயுள்ள அறிவைத் தேடாதவிடத்து புறக்கண்களினால் யாதொரு பயனுமில்லை.

கண்ணுடையரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையவர் கல்லாதவர்,

எனச் சொல்லியிருப்பதும் நன்கு விளங்கும்.

அறிவு ஒவ்வொருவரிடத்தும் இயற்கையாக அமைந்திருப்பது. இந்த அறிவாகியவொளியை அறிவின்மை என்னும் களிம்பு பற்றிக்கொண்டிருக்கிறது. இந்த களிம்பை நீக்கினால்தான் அதனுள்ளிருக்கும் அறிவு தன்னுடைய சுபவொளியை வீசிப்ரகாசிக்கும் இக் களிம்பை நீக்கி அறிவின் வொளியை ப்ரகாசிக்கச் செய்ய நம்முடைய புறக் கண்கள் சாதகமாகவிருக்கின்றன. இக் கல்வியாகிய சாணைக்கல்லில் ஓயாது தீட்டுவதினால் அறிவைப் பற்றியிருக்கும் மாசு நீக்கப்பட்டு அறிவின் சோபை ஒளிவிட்டொளிரும். இதனாலேயே கல்வியின் பெருமையைப்பற்றிப் பேசவந்தவிடத்துப் பெரியோர்களெல்லாம்,

கல்வியே நல்லுயிரைக் காப்பதற்கு நற்றுணையாம்
கல்வியே நல்லுடம்பைக் காப்பதாம் கல்வியே
செல்வப் பொருளின்பஞ்சேர்க்குந் தலைமைசேர்
செல்வமாஞ் செய்யும் சிறப்பு என்றும்,
கல்வியே யாவர்க்குமொளிகொண்ட வடிவமாங்
கல்வியே புதையலாகுங்
கல்வியே பரதேசகமனவின மாகுமக்
கல்வியே துணையதாகுங்

கல்வியே திசைகொண்ட கனகீர்த்தியைத் தரும்
கல்வியே பெருமையாக்கும்
கல்வியே வேண்டுநற் போகங்களைத் தரும்
கல்வியே யின்பமாக்கும்
கல்வியே நிலைகொண்ட கற்பகத் தருவதாம்
கல்வியே செல்வமாகும்
கல்வியே யாசரால் பூஜை செய்விக்கும் அக்
கல்வியே கடவுளாகும்
கல்விக்கு நிகரான பொருளொன்றுமிம்மையிற்
கருதிடினுமில்லையில்லை
கல்லாமைத்தொன்று மில்லாமைக்குமிரு
காற்பசுவதென்பர் மாதோ என்றும்,

“ கல்லாத மூடரைக் காணவுமாகாது
கல்லாத மூடர்சொற் கேட்கக் கடனன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லாராம்
கல்லாத மூடர் கருத்தறியாரே ” என்றும்,

“கல்வியறிவுதரும் கற்பைநிலைநிறுத்தும் இவ்வாழ்வுக்கேற்றஇசை வெல்லாம் செய்விக்கும் இந்நிலத்து மேன்மையெல்லாம் எய்துவிக்கும் முத்தியெனும் அந்நிலத்துக்குற்ற துணையாம்” என்றும்,

“ அறம் பொருளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும் — உறுங்கவலொன்
உற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியினுங்கில்லை
சிற்றுயிர்க்கு உற்ற துணை ” என்றும்

“ குஞ்சி அழகும் கொடுந்தானைக் கேட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல — நெஞ்சத்து
நல்லம் யாம் என்னும் நடுவுநிலைமையாற்
கல்வி அழகே அழகு ” என்றும்

केयूराणि न भूषयन्ति पुरुषं हाराः न चन्द्रोज्वलाः न स्नानं न विलेपनं न कुसुमम् नालङ्कृतामूर्धजाः । वाण्येका समलङ्करोति पुरुषं या संस्कृता धार्यते क्षीयन्तेऽखिलभूषणानि सततं वाग्भूषणं भूषणम् ॥
இவ்விதமாகச் சிறப்பித்துக் கூறியிருக்கிறார்.

கல்வியானது இன்பம், சிறப்பு, ஸாமர்த்தியம் முதலியவற்றைத் தருவதில் பிரயோஜனப்படுகிறது. இன்பம் தரும் பயன்

விசேஷமாய் ஏகாந்தத்திலும், சிறப்பைத் தருவது. பேச்சிலும், சாமர்த்தியத்தைத் தருவது கார்யநிர்வாகத்திலும் தோன்றுமென்பது ஆன்றோரின் கொள்கை. வழக்கப்பட்டவர்கள் தனித்தனியாய் ஒவ்வொரு விஷயத்தையும் செவ்வையாய் நிதானித்து நடத்துவார்களாயினும் எல்லாக் கார்யங்களையும் சீர்தூக்கிப் பார்த்து தகுந்த ஆலோசனை செய்து அவற்றை யொழுங்காய் நிறைவேற்றுவது கல்விமான்களிடத்திலேயே வெகுவாய்த் தோன்றப்படும். இன்னும் கல்வியின் சிறப்பைப்பற்றி சொல்லவந்தவிடத்து

"எண்ணென்பவேனை யெழுத்தென்ப யிவ்விரண்டும்
கண்ணென்ப வாழுமுயிர்க்கு" என்றும்

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்றபடி கணிதநூல்களும் இலக்கணநூல்களும் மனிதர்களுக்குக் கண்களாகும் என்றும்,

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறுமறிவு

என்று சொல்லியிருக்கிறபடி மணற்கேணி தோண்டிய அளவு சுரப்பதுபோல் மனிதர்க்கு அறிவு கற்றவளவாகும் என்றும் இன்னும் பலவாறுகச் சிறப்பித்துக்கூறியுள்ளார். இவைமாத்திரமன்று. எண்ணறியப் பிறவிகளில் மானிடப் பிறவியே மேலானதென்று பெரியோர் பலருங் கூறியிருத்தலின் காரணம் எதனால் என்று ஆராய்ந்துபார்க்குமிடத்து சேய்மையாகியகாலதேசங்களில் நிகழ்ந்தனவும் நிகழ்பவுமாகியவைகளை உணர்ந்துகொள்ளுதலும் பொருள்களின் கூறுபாட்டை யுணர்ந்து உறுதிப்பொருளையடைவதற்குத் தக்க வழியில் முயன்றடைதலும் மக்களுயிர்க்கன்றி ஏனையுயிர்க்குக் கூடாமைபற்றியே யெனலாம்.

இங்ஙனம் மக்கட்கு வேண்டிய எல்லாவற்றையும் அறிந்தடைவதற்கு கல்வியே முக்கிய சாதனமாயுள்ளது இதனாலன்றோ கல்வியை உலகத்தை உள்ளபடியேயுள்ள மூன்று கண்களில் ஒன்றுக பாவித்துப் பேசியுள்ளார்.

'கண்ணென்ப படுவமூன்று
காவலர், கல்வி, காமர் விண்ணினைச்
சுழலவோடும் வெய்யவன் என்னும்போர் என்றூர்சூளாமணியார்

எவனொருவன் இப்படியிருக்கும் கல்வியைப் படித்துத் தேர்ச்சியடைகிறானோ அவனுக்குத் தன் ஊரும் வேறு ஊரும்

ஒன்றுதான், தன் ஜனங்களும் வேறு ஜனங்களும் ஒன்றுதான், அவன் எல்லாவற்றிலும் ஸமர்த்தனுகிருன். இது இப்படியிருக்க கற்காமலிருப்பது யாது பயன்?

" உலப்பத்தலைக்கூடி யுள்ளப் பிரித
லனைத்தே புலவர் தொழில் " என்றும்

உடையார் முனில்லார்போலேக் கற்றுங்கற்ருர்
கடையரே கல்லாதவர்

ஒருமைக்கட்டான் கற்ற கல்வி யொருவற்
கெழுமையுமே மாப்புடைத்து

என்றபடி கல்வி கற்கவேண்டிய அவசியத்தைப் பற்றியும், அதன் சிறப்பைப் பற்றியும், அது எத்தகையது என்பதைப்பற்றிப் பார்த்தோம். தவிர ஒரு பிறவியில் கற்ற கல்வி ஏழு பிறப்பிலும் உதவும் என்பதையும் மேலுள்ள செய்யுளினல் அறிந்துகொண்டோம். இக்கல்வியானது அரசனைவிட பதின்மடங்கு மேலானதென்றும், அக்கல்விக்கு மதிப்பு இருக்கிறதேயொழிய அரசனுக்குக்கூட கல்விக்கு ஒப்பிடுங்கால், மரியாதை நடக்கவில்லை என்பது நமக்கு நன்கு புலப்படும். இதையொப்ப

" மன்னனுமாசறக் கற்ருேனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்ருேன் சிறப்புடையன் — மன்னனுக்கு
தன் தேயமில்லாற் சிறப்பில்லை
கற்ருேர்க்குச் சென்றவிடமெல்லாஞ் சிறப்பு " எனவும்
யாதானு நாடாமலூராமா லென்னெருவன்
சாந்துணையுங் கல்லாதவாறு என்றும்

स्वगृहे पूज्यते मूर्खः स्वग्रामे पूज्यते प्रभुः
स्वदेशे पूज्यते राजा विद्वान् सर्वत्र पूज्यते ।
को धीरस्य मनस्विनः स्वविषयः कोवा विदेशः स्मृतो
यं देशं श्रयते तमेव कुरुते बाहुप्रतापार्जितम् ।
यद्दंष्ट्रानखलाङ्गुलप्रहरणैः सिंहो वनं गाहते ।
तस्मिन्नेव हतद्विपेन्द्ररुधिरैः तृष्णां छिनत्यात्मनः ॥

என்பவைகள் நன்கு கல்விச்சிறப்பைப் பற்றிக் கூறின. அந்தக் கல்வியைக் கற்று யாவரும் மேன்மையடைவாராக.

கிருஷ்ணன்.

உ

ஸ்ரீ சந்திரமௌளீச்வராய நம:

ஸ்ரீசங்கரஜயந்தி

மகோத்ஸவப் பத்திரிகை,

कांचीपुराभरण कामद कामकोटिपीठाभिषिक्तवरदेशिकसार्वभौम ।
सार्वज्ञशक्त्यधिगताखिलमन्त्रतन्त्रचक्रप्रतिष्ठिताविजृंभितचातुरीक ॥
श्रुतिस्मृतिपुराणानामालयं करुणालयम् ।
नमामि भगवत्पादं शङ्करं–लोकशङ्करम् ॥

ஸ்ரீகைலாஸவாஸியான பரமேச்வரன் பிரம்மாதிதேவர்களின் பிரார்த்தனைக் கிணங்கி லோகக்ஷேமார்த்தமாய் தர்மஸ்தாபனம் செய்யவேண்டி, சுமார் 2500 வருஷங்களுக்கு முன் இப்புவியில் காலடி என்னும் க்ஷேத்திரத்தில் ஸ்ரீகைலாஸபதியே மானிட உரு வந்தாங்கி ஸ்ரீசங்கரர் என்னும் நாமதேயத்துடன் தேசமுழுவதும் திக்விஜயம் செய்து அனேக துர்மதங்களைக் கண்டித்து ஷண்மத ஸ்தாபனம் செய்து அத்வைதமதத்தை நிலைநாட்டி உத்தமமான பலக்ஷேத்திரங்களில் யந்த்ரஸ்தாபனம்செய்து கடைசியில் மோக்ஷ நகரில் ஒன்றாகிய ஸ்ரீகாஞ்சீக்ஷேத்திரத்தையடைந்து அந்த க்ஷேத்திரத்தை ஸ்ரீசக்ராகாரமாய் நிர்மாணம்செய்து, பிந்து ஸ்தானத்தில் ஸ்ரீ காமகோடிபீடத்தை ஸ்தாபனம்செய்து ஜகதம்பிகையான ஸ்ரீ காமாக்ஷி தேவியின் ஸன்னிதானத்தில் ஸ்ரீ சக்ர பிரதிஷ்டை செய்தும் ஸர்வக்ஞ பீடாதிரோகணம் செய்தும், இன்றைக்கும் நமது பாரத புண்ணிய பூமியிலுள்ள அனேக க்ஷேத்திரங்களில் அர்ச்சாவதார ரூபாய் விளங்கிக்கொண்டு பக்தகோடிகளுக்கு அனுக்ரஹம் புரிந்து வருவது யாவரும் அறிந்தவிஷயம்,

அப்பேர்பட்ட ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாளின் அவதார சுபதினம் அங்கிரஸ௵ சித்திரை௴ 29உ ஸௌம்யவாரம் வருவதைமுன்னிட்டு 25உ (7–5–32) ஸ்திரவாரம் முதல் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் அவர்களின் சென்னையில் விளங்கும் தப்புசெட்டித்தெரு 119-ம் நெம்பர் ஸ்ரீ மடத்தில் ஸ்ரீ பகவத்பாத மூர்த்திக்கு காலையில் மஹந்யாஸ பூர்வம் அபிஷேகம், அர்ச்சனை தீபாராதனைமுதலிய பூஜையும்

வேதபாராயணம், ப்ரஸ்தானத்ரயபாஷ்ய பாராயணம், மாலையில் அரியபெரிய உபந்யாஸங்கள், அலங்காரம், தீபாராதனை, விநியோகங்களும் (11–5–32) ஸௌம்யவாரம் அவதார தினத்தன்று விசேஷ பூஜை ஸந்தர்ப்பணை, தீபாராதனை, பானகபூஜை, விநியோகம் முதலியவைகளும், ஸ்ரீ பகவத்பாத மூர்த்திக்கு ஸகல ஸந்நாஹ வைபவங்களுடன் பட்டணப்பிரவேசமும் நடைபெறும். பக்தகோடிகள் யாவரும் நாள்தோறும்வந்திருந்து ஸ்ரீமத் ஆசார்ய மூர்த்தியைத் தரிசித்தும், ஸத்விஷய உபந்யாஸாதிகளை ச்ரவணம் செய்தும், ஸ்ரீ பரமாசார்யாளின் பூர்ணாநுக்ரஹத்துக்கு பாத்திராளாகும்படி கோரப்படுகிறது.

R. சுப்ரமண்யய்யர், ஸ்ரீ சங்கரமடம் சென்னை.	K. குப்புஸ்வாமி அய்யர், ஸ்ரீ மடம் சர்வாதிகாரி ஸ்ரீகார்யம்&ஏஜண்டு

உ

ஸ்ரீ சந்திரமௌளீச்வராய நம:

ஸ்ரீ சங்கர ஜயந்தி

மஹோத்ஸவப் பத்திரிகை.

कांचीपुराभरण कामद कामकोटिपीठाभिषिक्तवरदेशिकसार्वभौम ।
सार्वज्ञशक्त्यधिगताखिलमन्त्रतन्त्रचक्रप्रतिष्ठितविजृंभितचातुरीक ॥

श्रुतिस्मृतिपुराणानामालयं करुणालयम् ।
नमामि भगवत्पादं शङ्करं–लोकशङ्करम् ॥

ஸ்ரீ கைலாஸவாஸியான பரமேசுவரன் ப்ரம்மாதி தேவர்களின் பிரார்த்தனைக்கிணங்கி லோக க்ஷேமார்த்தமாய் தர்மஸ்தாபனம் செய்யவேண்டி சுமார் 2500 வருஷங்களுக்கு முன் இப்புவியில் காலடி என்னும் க்ஷேத்திரத்தில் ஸ்ரீ கைலாஸபதியே மானிட உருவந்தாங்கி ஸ்ரீ சங்கரர் என்னும் நாமதேயத்துடன் தேசமுழுவதும் திக்விஜயஞ்செய்து அனேக துர்மதங்களைக் கண்டித்து ஷண்மதஸ்தாபனஞ்செய்து அத்வைதமதத்தை நிலைநாட்டி, உத்தமமான பல க்ஷேத்திரங்களில் யந்த்ரஸ்தாபனம் செய்து கடைசியில் மோக்ஷநகரில் ஒன்றாகிய ஸ்ரீ காஞ்சீ க்ஷேத்திரத்தை

அடைந்து அந்த க்ஷேத்திரத்தை ஸ்ரீசக்ராகாரமாய் நிர்மாணம் செய்து, பிந்துஸ்தானத்தில் ஸ்ரீ காமகோடி பீடத்தை ஸ்தாபனம் செய்து ஜகதம்பிகையான ஸ்ரீ காமாக்ஷீதேவியின் ஸன்னிதானத்தில் ஸ்ரீ சக்ரப்ரதிஷ்டை செய்தும், ஸர்வக்ஞபீடாதிரோஹணம் செய்தும் இன்றைக்கும் நமது பாரதபுண்ணியபூமியிலுள்ள அனேக க்ஷேத்திரங்களில் அர்ச்சாவதாரரூபராய் விளங்கிக்கொண்டு பக்த கோடிகளுக்கு அநுக்ரஹம்புரிந்துவருவது யாவருமறிந்த விஷயம்.

அப்பேர்ப்பட்ட ஸ்ரீ ஆதிசங்கரபகவத்பாதாளின் அவதார சுபதினம் நாளது ஆங்கீரஸ்-ளு சித்திரை-மீ 28உ (10—5—32) மங்களவாரம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகளவர்களின் கும்பகோணத்தில் விளங்கும் ஸ்ரீமடத்தில் விசேஷ பூஜைகளும், ஸாயங்காலம் பானகபூஜையும் ஸ்ரீ பகவத்பாதமூர்த்தி வீதிப்பிரதக்ஷிணமும் மாலை 7 மணிக்குமேல் ஸ்ரீ ஆசார்யசரித்திர உபந்யாஸங்களும் நடைபெறும். ஆஸ்திகர்கள் யாவரும் ஷை ஸமயங்களில் வந்து ஸ்ரீ பரமாசார்யாளின் அநுக்ரஹத்திற்குப் பாத்திரர்களாகும்படி கோரப்படுகிறது.

K. குப்புஸ்வாமி அய்யர்,
ஸ்ரீமடம் ஸ்ரீகார்யம்.

சிறுவருக்கான சிறுகதைக் கொத்து.

துர்யோதநன்.

1. சந்த்ர வம்சத்திலே த்ருதராஷ்ட்ரன் புத்ரனாகப் பிறந்தவன் துர்யோதநன். இவனது தாய் காந்தாரி. பசியோடுவந்த வியாஸருக்கு அன்புடன் அன்னமிட்டாள். அவரை அர்ச்சித்தாள். உனக்கு என்னவரம் வேண்டுமென்றாரவர். பலமுள்ள நூறு பிள்ளைகள் வேண்டும் என்றாள். அப்படியே ஆசீர்வதித்தார். பெரியோரைப் பூஜித்தால் அது வீணாகுமா? கைமேல் பலன் கிட்டியது.

2. குந்தி தர்மனைப் பெற்றாள் என்று கேட்டாள் காந்தாரி. பொறாமைகொண்டாள். ஐயோ! எனக்கு இன்னும் குழந்தை பிறக்கவில்லையே என்று வயற்றில் அடித்துக்கொண்டாள். அப்போது அவள் கர்ப்பம். உடனே கர்ப்பம் ஓர் மாம்ஸ பிண்டம்போல் கீழே விழுந்தது. தற்செயலாக வியாஸர் அங்கே வந்தார். அதை நூறாக வெட்டி நூறு பாத்ரத்தில் வைத்தார்.

3. மிகுதி ஒன்றிருந்தது. அதையும் வேறொரு பாத்ரத்தில் வைத்தார். ஜலத்தை அதைச் சுற்றி விடச்சொன்னார். சில காலம் சென்றபின் நூற்றோர் குழந்தை பிறந்தன. துர்யோதனன் பிறந்தவுடன் கழுதைபோல் கத்தினான். திருதராஷ்ட்ரன் பெரியோரை அழைத்தான். ஏன் இப்படி கத்துகிறது? என்று கேட்டான். அவர்கள் ஞானக்கண்ணால் பார்த்தனர்.

4. இவன்மூலமாக இக் குலம் அழியும்! ஸகல ராஜாக்களும் இவனால் மடிவர்! என்றார்கள். இதற்கென்ன பரிஹாரம் என்று கேட்டான். இக் குழந்தையைத் தூர எறிவதே பரிஹாரம் என்றார்கள். தந்தைக்கு மனம் வரவில்லை. இவனை வளர்த்துவந்தார். பாண்டவருடன் இவன் த்ரோணரிடம் வில் வித்தை கற்றான். பலராமரிடம் கதாயுத்தம் கற்றுக்கொண்டான்

5. தாயைப்போல் மகனிருந்தான். அவள் பொறாமையால் வயிற்றை அடித்துக்கொண்டாளல்லவா? துர்யோதனன் பீமனைக்கண்டு பொறாமைகொண்டான். அவனைக் கொல்லவும் வழிதேடினான். ஒருநாள் பீமனுக்கு விஷங்கலந்த அன்னத்தைக் கொடுத்தான். பீமன் அதை ஜீர்ணம் செய்துகொண்டான். மற்றோர் ஸமயம் விஷான்னத்தைக்கொடுத்துக் கங்கையில் தள்ளினான்.

6. அப்போதும் இவன் இறக்கவில்லை. பாம்பைவிட்டு கடிக்கச்செய்தான். கங்கையில் சூலத்தை நட்டு பீமனைத்தள்ளினான். திக்கற்றவருக்கு தெய்வமே துணை! சூலத்தில் படாமல் பீமன் ஜலத்தில் விழுந்தான். பாம்புகள் அவனைநாகலோகத்திற்கு அழைத்துச்சென்றன. வாஸுகியினிடங்கொண்டு விட்டன. அங்கே உள்ள ஆர்யகன் பீமனைப்பார்த்தான். எனது பேரனது பேரனல்லவா நீ என்றான்.

7. அந்த ஸ்நேஹத்தால் இவனுக்கு நன்மைசெய்ய எண்ணினன். எட்டுபானைநிறைய ஔஷதி ரஸத்தைக் காட்டினன். ஒவ்வொருபானை ரஸமும் ஆயிரம் யானை பலமளிக்கும். எவ்வளவு உன்னால் குடிக்கமுடியுமோ அவ்வளவையும் குடி என்றான். பீமன் எட்டுபானை ரஸத்தையும் குடித்துவிட்டான். அது ஜீர்ணமாக ஏழுநாளானது. எட்டாம்நாள் பூலோகம் வந்தான்.

8 இவனைவிட்டுப்பிரிந்த குந்தியும்பாண்டவரும் கதறினர். விதுரர்வந்து ஸமாதானம் சொன்னார். பீமனும்வந்து தாயை வணங்கினான். நடந்ததைச் சொன்னான். எல்லோரும் ஸந்தோஷமடைந்தனர். கெடுவான் கேடுநினைப்பான்! பீமனைக் கொல்லப்பார்த்தான் துர்யோதனன். பீமன் பல்லாயிரம் யானைபலத்தோடுவந்தான்.

9. குருதக்ஷிணையாக துரோணர் பாஞ்சாலனைக் கட்டிவாச் சொன்னார். துர்யோதனன் அடிபட்டுவந்தான். அர்ஜுனபீமர் கட்டிவந்தனர். துரோணரை முதலைப் பிடித்துக்கொண்டது தன்னைக்காக்க சிஷ்யர்களை அழைத்தார். மற்றவர் விழித்து நின்றனர். அர்சுநன் அதைக்கொன்றான். ஆசார்யனைக் காத்தான். தர்மர் குணத்தைக்கண்டு அவரை யுவராஜாவாகப் பட்டாபிஷேகம் செய்தனர்.

10. பொறாமைகொண்ட துர்யோதனன் கணிகன் என்னும் மந்திரியைக் கலந்தான். தந்தையிடம் சொல்லிப் பாண்டவர்களை வாரணாவதத்திற்கனுப்பினான். புரோசனனைக்கொண்டு அரக்கு மாளிகைக் கட்டினான். பாண்டவர்களோடு அதைக் கொளுத்த ஏற்பாடு செய்தான். விதுரர் இதைப் பாண்டவர்களுக்குச் சொன்னார். சுரங்கத்தின் வழியாகப் பாண்டவர் வெளியிற் சென்றனர்.

11. கெட்ட எண்ணமுள்ள புரோசநனுடன் அவ்வரண்மனை எரிந்தது. துர்யோதனனைப்போல் பொறாமைகொள்ளக் கூடாது. பாண்டவர்களைப்போல் பொறுமையாக இருக்க வேண்டும்.

ஸ்ரீவத்ஸ வே,ஸோமதேவசர்ம.

வாரவிருத்தாந்தம்.

மூன்றுகோடி தாநம். 25உ பம்பாயைச் சார்ந்த ஸ்ரீமான் ஸர் டோராப் டாடா என்ற கோடீச்வரர் 3-கோடி தர்மத்திற்காக எழுதிவைத்திருக்கிறார். இதுதவிர 25-லக்ஷம் ரூபாய் ஏற்கனவே தர்மம் செய்திருக்கிறார். திடீரென்று ஆபத்து அடைவோருக்கும் பொது ஸேவையிலீடுபட்ட எந்த ஸபைக்கும் இந்நிதி உதவிபுரியும், நீங்காத வியாதிகளை நீக்க வழி காண்போருக்குப் பரிசாக அளிக்கவும் அக்கலை கற்போருக்கு உபகாரசம்பளமளிக்கவும் 25-லக்ஷம் வைக்கப்பட்டிருக்கிறது. தநமும் நல்வழியில் சென்று தாதாவும் க்ஷேமமடைக.

வேதகாவ்ய கலாசாலை. 26உ வெளியான அறிக்கையிலிருந்து நெல்லூரில் ஷை சாலையின் ஆறுமாண்டு பூர்த்தியாகி ஏழாவது வர்ஷம் பிறந்ததாக அறிகிறோம். 78-மாணவர்களுக்கு அன்னமிட்டு இதர சாஸ்திரங்களுடன் ஆயுர்வேதமும் கற்பிக்கப்படுகிறது. அர்த்தார்ஜநமே பரமபுருஷார்த்தம் என்ற எண்ணம் மாணவருக்கும் மற்றவருக்கும் அகலவேண்டும். ஸதாசாரம் பக்தி பரோபகாரம் முதலியவைகளை மாணவர் கைப்பற்றின் பயனுண்டு.

வாமந புராணம். 27உ சென்னை ஸ்ரீசங்கரமடத்தில் ஷை புராண உபன்யாஸம் ஆரம்பிக்கப்பட்டது. ப்ரதிதிநம் மாலை 5-மணிக்குத் துவக்கி ஸந்த்யாகாலத்தில் உபந்யாஸம் முடிகிறது. அங்கு பலர் ஸந்த்யாநுஷ்டாநம் செய்து ஸ்ரீமதாசார்யபூஜையைப் பார்த்துச் செல்கின்றனர். ஷை திநத்திலேயே ஸ்ரீமார்க்கண்டேய புராணமும் பூர்த்தியானது. ச்ரவணம் செய்வோர் மாத்திரமின்றி ஏனையோரும் அபூர்வமான புராணங்களை அறிய தமிழில் சுருக்கமாக ஒவ்வொரு புராணத்தையும் வெளியிட பக்தர் பலர் முயற்சி செய்கின்றனர். மார்க்கண்டேயம் வெளியாய்விட்டது.

ஸ்ரீமத்ராமாயணதத்வம். வடார்க்காடு ஜில்லா திருப்பந்தூரில் ஸ்ரீமான் டி. வி. ராமசேஷய்யாவர்கள் ஷை விஷயமாக சில உபந்யாஸம் செய்தார். பல பக்தர்கள் ச்ரவணம் செய்தனர். உபந்யாஸகருக்குத் தக்க ஸம்பாவனை செய்தனர். திருவாரூரில் உபாத்

யாயர் ஸ்ரீமான் எம். ஆர். வெங்கட்டராமய்யர் ஸ்ரீராமஜநநத்தைக் காலக்ஷேபமாக நடத்தினர். பொழுகுடி கோபாலகிருஷ்ண பக்த ஸமாஜத்தார் ஸ்ரீராமநவமியைப் பிராம்மணஸந்தர்ப்பணையுடன் கொண்டாடினர். பெரியகுளத்திலும் நடந்தது.

ஸ்ரீ சங்கர ஜயந்தி. இவ்வாண்டு ஸ்ரீசங்கரஜயந்தி சித்திரைமீ 28உ வருகிறது. சிலர் 29உ என்றும் கொண்டாடுகின்றனர். அவாள் அவதரித்த காலடியிலும் ஸர்வக்ஞபீடாரோஹணம் செய்த காஞ்சியிலும் விசேஷமாக ஸ்ரீமதாசார்ய விக்ரஹத்திற்குப் பூஜை நடைபெறும். ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்பாள் ஆலயத்தில் ஸ்ரீமதாசார்யாளுக்கு ப்ரதிதிநம் ப்ராகார ப்ரதக்ஷிண உத்ஸவமும், வித்வான்களது உபன்யாஸமும் 10-நாள் நடைபெறும்.

பண்ருட்டியில் ஜயந்தி. சென்ற ஆண்டுகளைப்போல் இவ்வாண்டும் அவ்வூர் ஆஸ்திகர்கள் ஒன்றுகூடி ஷை உத்ஸவத்தைச் சிறப்பாக நடத்தப்போகின்றனர். இவ்வூரில் அன்னதானமும் சென்னையிலிருந்து ஓர் வித்வானது உபன்யாஸமும் விசேஷச் சிறப்பாகும். ஆரியவைச்யஸமூஹநந்தவநத்தில் உபன்யாஸம் நடக்கும். ஆஸ்திகர்களது மதாபிமானம் போற்றத்தக்கது.

சிதம்பரத்தில் ஜயந்தி. குருவய்யர் அக்ரஹாரத்தில் காலையில் உபநிஷத்பாராயணத்துடன் பூஜை, ஸமாராதனை, உபந்யாஸம் முதலியவைகள் நடைபெறும். அன்றிரவு புஷ்பகவிமானத்தில் ஆசாரியவிக்ரஹத்தை எழுந்தருளச்செய்து வேதபாராயணம், பஜனை முதலியவைகளுடன் கிராமப்ரதக்ஷிணம் நடைபெறும்.

சென்னையில் ஜயந்தி. தம்புசெட்டித்தெரு ஸ்ரீமடம், திருவல்லிக்கேணி பாணிகோஷ்டி அத்யயந ஸபை, மைலை வைதிகர் ஸபை, ஸம்ஸ்கிருதகாலேஜ், மாம்பலம் பிராமணஸபை, அமாகலா விலாஸினீ ஸபை முதலியவிடங்களிலும் நடக்கின்றன.

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா,